




இந்தியாவிலேயே முதன்முறையாக

# கோவை கங்கா மருத்துவமனையில் ஏர் ஆம்புலன்ஸ் சேவை துவங்கியது

கோவை, ஜூன் 26–

கோவை கங்கா மருத்துவமனையின் ஏர் ஆம்புலன்ஸ் சேவையை, இந்திய விமானப் படை தலைமை தளபதி பிரேந்தர் சிங் தானோ கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

கோவை துடியலூர் அருகே வட்டமலைபாளையம் கங்கா செவிலியர் கல்லூரி வளாகத்தில், கங்கா மருத்துவமனை சார்பில், இந்தியாவிலேயே முதன்முறையாக ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் சேவை துவக்க விழா நடைபெற்றது.

விழாவில், கங்கா மருத்துவமனை இயக்குனர் ராஜசபாபதி வர வேற்றார். ஓய்வு பெற்ற பொது மருத்துவ சேவை இயக்குனர் (ஏர்) அனில் பெல், கலெக்டர் ஹரிகரன், மாநகர போலீஸ் கமிஷ்னர் அமல்ராஜ், கோவை மேற்கு மண்டல போலீஸ் ஐஜி பாரி ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

நொய்டா வருமானவரித் துறை ஆணையர் ஸ்ரீவத்சவா தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக, இந்திய விமானப் படையின் ஏர் சீப் மார்ஷல் பிரேந்தர் சிங் தானோ கலந்து கொண்டார். பின்னர், அங்கு நடந்த, அவசர கால விமான மருத்துவ சேவை செயல்பாடு குறித்த ஒத்திகையையும் பார்வையிட்டார்.

அப்போது அவர் பேசியதாவது:–

கங்கா மருத்துவமனை ஏர் ஆம்புலன்ஸ் சேவையை துவங்கியது மகிழ்ச்சி அளிக்கிறது. நாடு முழுவதும் இந்த ஏர் ஆம்புலன்ஸ் சேவை பயன்பட வேண்டும். இந்த ஏர் ஆம்புலன்ஸ் மூலம், அவசர சிகிச்சைக்காக, ஒரு நகரத்தில் இருந்து மற்றொரு நகரத்திற்கு, நோயாளிகளை விரைவாக கொண்டு செல்ல முடியும்.

கடந்த 1999ம் ஆண்டு, கார்கில் போர் நடந்தது. அப்போது ராணுவ வீரர்கள் பலர் காயமடைந்தனர். அப்போது, ஜம்முவில் ஸ்ரீநகர் மற்றும் அவந்பூர் உள்ளிட்ட மலைப் பிரதேசங்களுக்கு, ஐஎப் எம்ஐ17 மற்றும் எம்ஐ 8 ரக ஹெலிகாப்டர்களை அனுப்பி, காயமடைந்த வீரர்களை மீட்டு, டெல்லியில் உள்ள ராணுவ மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டனர்.




### விமானப்படையில் ஏர் ஆம்புலன்ஸ்

இதையடுத்து, 2007ம் ஆண்டு இந்திய விமானப்படையில், சிசி ஏ டிடி எனும் கிரிட்டிகல் கேர் விமானச் சேவை குழு அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம், விமானப்படையில் அவசர கால சிகிச்சைக்கு சிறந்த மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்திய விமானப்படையில் 17 விமானங்கள் ஏர் ஆம்புலன்சாக மாற்ற முடியும். எனக்கு ஒரு விபத்து ஏற்பட்ட போது, ஏர் ஆம்புலன்ஸின் முக்கியத்துவத்தை அறிந்தேன். ஏர் ஆம்புலன்ஸ் போன்ற சேவையால், இந்தியாவில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும், மருத்துவ சேவை அளிக்க முடியும். இவ்வாறு ஏர் சீப் மார்ஷல் பிரேந்தர் சிங் தானோ பேசினார்.

விபத்தில் காயமடைந்த வரை, விரைவாக கொண்டு செல்லவும், உடல், உறுப்புகளை பிற நகரங்களுக்கு எடுத்துச் செல்லவும், கங்கா மருத்துவமனை சார்பில், ஏர் ஆம்புலன்ஸ் சேவை தொடங்கப்பட்டது.

இந்த ஏர் ஆம்புலன்ஸ் இத்தாலியில் தயாரிக்கப்பட்ட அகுஸ்தா 199 ரக ஹெலிகாப்டர். 2 பைலட், 1 மருத்துவர், நோயாளியுடன் உறவினர் ஒருவர் பயணிக்கலாம். எரி பொருள் நிரப்பிய நிலையில், ஏர் ஆம்புலன்ஸில் 500 கி.மீ தூரம் வரை சென்று வர முடியும். இதய துடிப்பை சீராக்கும் கருவி உள்ளிட்ட மருத்துவ வசதிகள் உள்ளன.

கோவை வட்ட மலைபாளையத்தில் உள்ள கங்கா நர்சிங் கல்லூரியில் ஹெலி பேடு அமைக்கப்பட்டுள்ளது. இந்த விழாவில், கங்கா மருத்துவமனை தலைவர் சண்முகநாதன், நிர்வாக இயக்குனர் கனகவல்லி சண்முகநாதன், ராஜசேகரன், ரமா ராஜசேகரன், ஜெம் மருத்துவமனையின் தலைவர் பழனிவேலு, கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனை நல்ல ஜி பழனிசாமி, ராமகிருஷ்ணா மருத்துவமனை அறங்காவலர் விஜயகுமார், கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனர் கிருஷ்ணன், செந்தில் குரூப் ஓ.ஆறுமுகசாமி, செல்வம் ஏஜென்சி நந்தகோபால், இயற்கை ஆர்வலர் குன்னூர் பாலச்சந்திரன் மற்றும் விமானப் படை அதிகாரிகள், மருத்துவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.